27/11/2020

# நாமக்கல் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ஒ.மு.எண்.10727/ஆ2/2020 நாள் .11.2020

பொருள் : பயிற்சி – கற்பித்தல் மற்றும் உற்றுநோக்கல் பயிற்சி – நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு, வரகூராம்பட்டி, வித்யா விகாஸ் கல்வியியல் கல்லூரியின் இரண்டாமாண்டு மாணாக்கர்களுக்கு பள்ளிகள் திறக்கும் வரை இணைய வழியிலும் பள்ளிகள் திறந்தபின் நேரிலும் பி.எட்., கற்பித்தல் மற்றும் உற்றுநோக்கல் பயிற்சி பெற அனுமதி – சார்பு.

பார்வை : 1. தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக் கழக பதிவாளரின் சுற்றறிக்கை எண். TNTEU/R/DR-I/Circular/2020/1119 நாள்.06.11.2020 மற்றும் TNTEU/R/DR-I/Circular/2020/1188 நாள்.20.11.2020.

2. நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு, வரகூராம்பட்டி, வித்யா விகாஸ் கல்வியியல் கல்லூரி முதல்வரின் விண்ணப்பம் நாள்.16.11.2020

-----

பார்வை 1–ல் காணும் 20.11.2020 நாளிட்ட சுற்றறிக்கையின்படி தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக் கழகத்தின் இணைவு பெற்ற அனைத்து கல்லூரிகளிலும் 2020–21 ஆம் கல்வியாண்டில் 2ஆம் ஆண்டு B.Ed./ B.Ed. (Spl) பயிலும் மாணாக்கர்கள் கோவிட்–19 பெருந்தொற்று காரணமாக பள்ளிகள் திறக்கப்படாத காரணத்தால் **இக்கல்வியாண்டு மட்டும் (2020–2021)** பள்ளிகள் திறக்கப்படும் வரை 30.11.2020 முதல் இணைய வழியில் online-லும் பள்ளிகள் திறந்தபின் நேரிலும் 16 வாரங்கள் அரசு / அரசு உதவி பெறும் மற்றும் மெட்ரிக் பள்ளிகளில் கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டதற்கிணங்க, பார்வை 2–ல் காணும் கடிதத்தின்படி இரண்டாமாண்டு பி.எட்., பயிலும் 200 மாணாக்கர்கள் 16 வார பள்ளி வேலை நாட்களுக்கு கற்பித்தல் பயிற்சி பெற ஆணை வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டது.

எனவே 30.11.2020 முதல் 16 வார பள்ளி வேலை நாட்கள் காலத்திற்கு பின்வரும் அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் இக்கல்வியாண்டு (2020–2021) மட்டும் மெட்ரிக் பள்ளிகளிலும் பள்ளிகள் திறக்கப்படும் வரை இணைய வழியில் online-லும் பள்ளிகள் திறந்தபின் நேரிலும் கற்பித்தல் பயிற்சி பெற கீழ்க்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதி அளிக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்:</u>

1. கற்றல் பணிகள் பள்ளிப் பணிகளுக்கு இடையூறு ஏற்படாமல் கற்பித்தல் பயிற்சி பெறவேண்டும்.
2. பள்ளிகள் திறக்கப்பட்டபின் கற்பித்தல் பயிற்சியின் போது சமூக இடைவெளி பின்பற்றப்பட வேண்டும்.
3. கோவிட்–19 பாதுகாப்பு தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும்.
4. தலைமை ஆசிரியரின் ஆணைப்படியும் அறிவுரைப்படியும் பயிற்சி பெறவேண்டும்.
5. கல்வித்துறை சார்ந்த உயர் அலுவலர்கள் ஆணைப்படி பயிற்சி பெறவேண்டும்.
6. பயிற்சியின்போது பிற கல்வியியல் கல்லூரிகளிலிருந்து மாணவர்கள் / மாணவிகள் பயிற்சி பெற வரும்போது இடையூறு ஏற்படுத்தக்கூடாது.
7. தலைமையாசிரியர், பிற ஆசிரியர்கள் மற்றும் பிற கல்வித்துறை உயர் அலுவலர்களிடம் கண்ணியமாகவும், மரியாதையுடனும் நடந்துகொள்ளவேண்டும்.
8. கற்பித்தல் பயிற்சியின்போது சம்மந்தப்பட்ட மாணவன் / மாணவி எவரேனும் ஒழுங்கீனமாக நடந்துகொண்டால் தலைமையாசிரியர் மூலம் உடனடியாக பயிற்சியிலிருந்து வெளியேற்றப்படுவார்.
9. மாணாக்கர்கள் அவர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பள்ளிகளைத் தவிர பிற பள்ளிகளில் பயிற்சி பெறக்கூடாது.
10. பயிற்சி மாணாக்கர்கள் online வகுப்புகள் தவிர பிற நேரங்களில் பள்ளி வளாகம்/ வகுப்பறைகளில் செல்போன் உபயோகித்தல் கூடாது.
11. தமிழ்நாடு ஆசிரியர் பல்கலைக்கழகத்தின் தகுதி / நிபந்தனைகளுக்கு உட்பட்டு கற்றல் /உற்றுநோக்கல் பயிற்சி மேற்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.